**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 17.03.2026</u>**

**OS.138/2018**

**பி.வா.சா.1 திரு.துரை**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாகிய குமார் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அண்ணன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் அதில் உள்ள விவரங்கள் எல்லாம் தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தானது எனக்கு எப்படி வந்தது என்றால் அது மூதாதையர் சொத்து. அந்த சொத்து மொத்தம் எவ்வளவு என்றால் 7 ஏக்கர். தாவா சொத்து எவ்வளவு என்றால் 1 ஏக்கர் மட்டும். மீதி உள்ள 6 ஏக்கரும் எங்களிடம் இல்லை, அதனை விற்றுவிட்டோம் என்றால் சரிதான். அவ்வாறு விற்றது 2019 ம் வருடம் என்றால் சரிதான்.

2. 2015 ம் வருடம் தாவா சொத்தின் மதிப்பு சதுர அடி ரூ.114/– ஆக அரசாங்க வழிகாட்டுதல் மதிப்பு இருந்தது என்றால் சரிதான். தாவா நிலுவையில் இருக்கும்போது வழக்கு அக்ரிமெண்டில் உள்ள சொத்தை 2019ல் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, இந்த வழக்கில்

உள்ள சொத்தை விட்டுவிட்டுதான் மீதியை கிரையம் செய்து கொடுத்துள்ளோம். தாவா சொத்தானது மொத்த எங்களுடைய சொத்தில் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு மேற்கே உள்ள 6 ஏக்கர்தான் 2019ல் அருண்குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் சொத்தை விற்கவேண்டிய அவசியம் இல்லை, வியாபாரம் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியிருப்பது பொய்யானதா என்றால் விற்பதற்காகதான் வியாபாரம் பேசினேன் என்று சொல்லியுள்ளேன்.

3. 2014–ம் வருடம் என்னிடம் பணம் இல்லை என்பதால்தான் வாதியின் மருமகனிடம் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கடனை எவ்வளவு நாளில் திருப்பி கொடுப்பதாக வாங்கினேன் என்றால் ரூ.4,00,000/– ஐ ஒருவருடத்தில் திருப்பி கொடுப்பதாக வாங்கினேன். அந்த காலகட்டத்திற்குள் அந்த கடனை திருப்பி கொடுக்க முடியவில்லை என்றால் சரிதான், அதற்காகதான் ஜெயாவிற்கு மாற்றி கொடுத்தேன். ஜெயாவின் மருமகனிடம் பெற்ற கடனை திருப்பி கொடுக்க இயலவில்லை என்பதால்தான் சொத்தை விற்கவேண்டும் என்பதற்காக வாதி ஜெயாவிடம் சொத்தை ரூ.9,50,000/–க்கு விலைபேசினேன் என்றால் சரியல்ல, ரூ.4,96,000/– ஜெயாவின் மருமகனுக்கு வட்டியும் முதலுமாக கொடுக்க வேண்டியதுதான் ஜெயாவிற்கு ரூ.9,00,000/–க்கு வட்டி முதலுமாக எழுதிக்கொண்டோம். 30.06.2015ம் தேதி எனக்கு ஜெயா வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தார் என்றால் என்னுடைய கைக்கு அது வரவில்லை. அந்த

அறிவிப்பை நாங்கள் 02.07.2015-ல் பெற்றுக்கொண்டோம் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 30.06.2015-ல் வாதி வழக்கறிஞர் மூலம் கொடுத்த அறிவிப்பைபெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் பதில் கொடுக்கவில்லை, காரணம் அவர்களே அக்ரிமெண்ட்டை கேன்சல் செய்துகொள்ளலாம் என்று பேசினார்கள் அதனால் கொடுக்கவில்லை. நாங்கள் தான் சொத்தின் வழிகாட்டி மதிப்பை குறைத்து கிரையம்செய்து கொடுப்பதாக சொன்னோம் என்றால் சரியல்ல. அருண்குமாருக்கு என்ன விலைக்கு சொத்தை விற்றோம், ஆவணம் என்ன விலைக்கு எழுதப்பட்டது என்றால் ஏக்கர் ரூ.20,00,000/-என்று மொத்தம் ரூ.1,03,00,000/- போல் கொடுத்தோம், அதே மதிப்பிற்கு தான் பத்திரமும் எழுதிக்கொண்டோம். மேற்படி சங்கதிகளை நான் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அருண்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்த ஆணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எங்களுக்கு தேவை இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல கிரையம் செய்யவில்லை, மொத்த 6 ஏக்கர் சொத்தையும் ரூ.16,00,000/-க்கு தான் அருண்குமாருக்கு நாங்கள் விற்பனை செய்தோம் அந்த ஆவண எண்.5091/2019 அரூர் சார்பதிவாளர் அலுவலகம் தேதி 03.12.2019 என்பது என்று சொன்னால் சரியல்ல, ரூ.1,03,00,000/--க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம்.

4. பின்னிட்டு அந்த ஆவணம் சேலம் தனி துணை ஆட்சியர் முத்திரை கட்டணம் என்பவரிடம் சென்று ஏக்கர் ரூ.3,50,000/- என்று மதிப்பீடு செய்து மொத்தம் ரூ.23,90,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டு பத்திரம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான ஒப்பந்த பத்திரம் ஒன்று ரத்து செய்ததாக சொல்லியுள்ளேன் அது எப்போது என்றால் 2015-ல் நடந்தது. அது குறிப்பாக எந்ததேதி என்றால் தேதி எனக்கு நினைவில்லை. எங்கு அவ்வாறு அந்த ரத்து பத்திரம் தயார் செய்யப்பட்டது என்றால் தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள பாயிடம். என்ன பேசி அவ்வாறு பத்திரம் தயார் செய்தோம் என்றால் பணம் கொடுக்கிறோம் கேன்சல் செய்து கொடுங்கல் என்று பேசினோம். எங்கு வைத்து அது பேசப்பட்டது என்றால் வீட்டில் வைத்து பேசிவிட்டு தாலுக்கா அலுவலகம் எதிரில் வந்தோம். வீட்டில் எவ்வளவு நேரத்திற்கு பேசினோம் என்றால் காலையில் 7.30 மணிபோல் பேசினோம். நான் சொல்வதுபோல அவ்வாறு எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லுவது எங்கு வைத்து கொடுத்தோம் என்றால் அரூர் தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள பத்திர எழுதும் இடத்தில் வைத்து கொடுத்தோம், பணத்தை வாங்கிகொண்டுதான் பத்திரத்தில் கையெழுத்து போட்டார்கள். அதுவும் பொய்யானது பணம் கொடுக்கிறேன் என்று சொல்லிதான் கையெழுத்து வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல, நாங்கள் பணம் கொடுத்த பிறகுதான் கையெழுத்தே போட்டார்கள். பணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுப்பதாக சொல்லிதான் கையெழுத்து வாங்கினோம், பின்னிட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில்

கையெழுத்து போட்டுவிட்டு பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னோம், அங்கு பணம்கொடுக்கவில்லை என்பதால்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் பணத்தை கொடுத்த பிறகு தான் பத்திரத்தில் கையெழுத்து போடுவதாக சொன்னார்கள், நாங்கள் பணத்தை கொடுத்தபிறகுதான் கையெழுத்து போட்டார்கள், மீண்டும் பத்திர பதிவு அலுவலகத்தில் ரூ.50,000 அதிகமாக கொடுத்தால்தான் பத்திரத்தை பதிவு செய்து தருவதாக சொன்னார்கள், நாங்கள் தரவில்லை என்பதால் அதனை பதிவு செய்து கொடுக்காமல் சென்றுவிட்டார்கள். அவ்வாறு பதிவு செய்து கொடுக்கவில்லை என்பதால் காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுக்கவில்லை, அவர்களிடம் பதிவு செய்து கொடுக்கச்சொல்லி கேட்டபோது பதிவு செய்து கொள்ளலாம் பதிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லி வந்தார்கள். அந்த பத்திரம் பதிவு செய்து கொடுக்காமல் சென்ற நிகழ்வு எப்போது நடந்தது என்றால் 2015 ல் இருந்து 6 மாதம் கழித்து நடந்தது, தேதி நினைவில்லை.

5. இந்த வழக்கை வாதி ஜெயா எப்போது தாக்கல் செய்தார் என்றால் 2018–ல் தாக்கல் செய்தார். 2015ல் இருந்து 2018 வரை பணம் கொடுத்ததற்காக ஏதாவது புகாரோ அல்லது வேறு நடவடிக்கையோ எடுத்தோமா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, பொதுவர்கள் வைத்து கேட்டோம். பொதுவர்கள் யார் என்றால் ஜெயராமன் மகன் ரவி, வேடியப்பன் மகன் செந்தில், ராமசாமி மகன் ரவி (ஜெயாவின்

மருமகன்). ஜெயராமின் மகன் ரவி எனது உறவினர் என்றால் சரிதான். வேடியப்பன் மகன் செந்திலும் எனது உறவினர் என்றால் இல்லை, ஜெயாவின் உறவினர்.

6. பண நெருக்கடிக்காக ஜெயாவின் மருமகன் ரவியிடம் கடன் பெற்றுவிட்டு, அதை திருப்பி செலுத்த முடியாததால் ஜெயாவிற்கே 1 ஏக்கரை ரூ.9,50,000/–க்கு விற்பதாக கிரையம் பேசி ரூ.9,00,000/–ம் எங்களுக்கு கொடுத்து விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல, ரவிக்கு கொடுக்கவேண்டிய கடன் மற்றும் வட்டியுமாக சேர்த்து ஜெயாவிற்கு ரூ.9,50,000/–க்கு நிலத்தை விற்பதாக அக்ரிமெண்ட் போடப்பட்டது. நான் இந்த வழக்கிற்காக சொல்கிறேன் எந்த வகையிலும் ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல, நான் நடந்ததைதான் சொல்கிறேன். ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொள்ள சதுர அடி ரூ.114/– என அரசு வழிகாட்டி மதிப்பு இருந்ததால் கிரையம் செய்துகொள்ள இயலவில்லை, அதனால்தான் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வாதி ஜெயா ஒப்புக்கொண்டார், நாங்கள் பணம் கொடுக்காமல் ஏமாற்றியதால்தான் வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

7. கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டும் என்றால் அசல் கிரைய ஒப்பந்தத்தை பத்திர பதிவு அலுவலகத்தில் கொடுக்கவேண்டும் அசல் கிரைய ஒப்பந்தபத்திரம் எனக்கு எப்படி வந்தது என்றால் நான் எடுத்து வரவில்லை, ஜெயா எடுத்து வந்தார், நாங்கள் 9 இலட்சம் கொடுத்த பிறகு அதனை பதிவு செய்து கொடுக்காமல் அந்த அசல் கிரைய ஒப்பந்த பத்திரத்தை அவரே

எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் சொல்வது போல ஒரு நிகழ்வு நடைபெறவில்லை, நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத விஷயத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல, பத்திரம் எழுதும்பாயிடம் அசல் கிரைய ஒப்பந்த பத்திரம் கொடுத்துதான் ரத்து பத்திரம் தயார் செய்யப்பட்டது. பணம் கொடுத்தது பத்திரம் எழுதும் பாய்க்குதெரியுமா என்றால் அவருக்கு தெரியாது, அந்த அலுவலக படிகட்டில் வைத்துதான் நாங்கள் பணத்தை ஜெயாவிற்கு கொடுத்தோம். அசல் ஒப்பந்த பத்திரத்தை நான் வாங்கவில்லை என்று சொல்லும்போது நான் பணம் கொடுக்கவில்லை என்பது நிரூபணம் ஆகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்துறையிடம் எந்த புகாரும் கொடுக்காமல் இருப்பதில் இருந்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.17 16:55:01 +0530